Judicial Form No.53
(See Rule 42 )
**DEPOSITION OF WITNESS**
( Chapter XXIII Code of Cr.P.C )

IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE, ARUPPUKOTTAI

| | | |
|---|---|---|
| Calendar | : | |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | Sessions Case No.41/2020 |
| Deposition of Witness of PW | : | Prosecution – PW 17 |
| | | Defence |
| | | Court |
| Name | : சண்முக கணபதி | |
| Father / Husband Name | : பொன்னுசாமி மூப்பனார் | |
| Village | : அருப்புக்கோட்டை | |
| Taluk | : அருப்புக்கோட்டை | |
| Caste | : | |
| Calling | : மத்திய அரசு ஊழியர் (ஓய்வு) | |
| Religion | : | |
| Age | : 75 | |

( 1 மற்றும் 2 எதிரிகள் ஆஜர். )

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1869 (Central Act 44 of 1969 ) on the 18.04.2026

வழக்கு விசாரணையின் போது இலவச வழக்கறிஞர் திரு. R.கணேஷ்பாண்டி, பதிவு எண் M.S.No.1228/2020 நீதிமன்றத்தில்

இருந்தார். மற்ற வழக்கறிஞர்களான திருமதி. நாகஜோதி, பதிவு எண் 5665/2022, திரு.சக்தி, பதிவு எண். 3461/2023 மற்றும் திரு. S.ராமலிங்கம், பதிவு எண் 2067/2002 ஆகியோர் ஆஜரில் இருந்தார்கள். எதிரிகளுக்கு இலவச சட்ட உதவி அளிக்கப்படும் என்று தெரிவித்தபோதும் அவர்களாகவே இந்த வழக்கை நடத்துவதாக கூறிவிட்டார்கள். ஆகையால், இலவச வழக்கறிஞர் திரு. R.கணேஷ்பாண்டி அவர்கள் முன்னிலையில் சாட்சியம் பதிவு செய்யப்பட்டது.

**முதல் விசாரணை :-**

1. நான் அருப்புக்கோட்டையில் புளியம்பட்டி பகுதியில் ஆயிரங்கண் மாரியம்மன் கோவில் அருகில் தெற்கு சிவஞானபுரம் தெருவில் குடியிருந்து வருகிறேன். நான் அஞ்சலக துறையில் முதுநிலை கணக்கு அதிகாரியாக பணியாற்றி ஓய்வு பெற்றுள்ளேன். கடந்த 31.01.2019 அன்று விருதுநகர் பிராதன சாலையில் உள்ள ஆயிரங்கண் மாரியம்மன் கோவில் அருகில் வசித்து வந்த திருமதி. கனகவள்ளியை நகைக்காக கொலை செய்து விட்டார்கள் என அறிந்துக் கொண்டேன்.

2. நான் கடந்த 02.06.2018 முதல் 17.01.2022 வரை அருப்புக்கோட்டை புளியம்பட்டி திருநகரம் சாலியர் மகாஜன பரிபாலன சபையின் தலைவராக பதவி வகித்து வந்தேன். மேற்சொன்ன சங்கத்தின் அலுவலகம் விருதுநகர் பிராதன சாலையில் உள்ள ஆயிரங்கண் மாரியம்மன் கோவில் அருகில் அமைந்துள்ளது. அருப்புக்கோட்டை நகர போலீசார் மேற்சொன்ன கனகவள்ளியின் கொலை தொடர்பான விசாரணைக்காக என்னுடைய அலுவலகத்திற்கு 06.02.2019 அன்று காலை சுமார் 8.30 மணியளவில் வந்தார்கள். என்னுடன் சங்க அலுவலக உதவியாளர் திரு.சங்கரமணி என்பவர் இருந்தார். ஆயிரங்கண் மாரியம்மன் கோவில் ஒட்டியுள்ள மண்டபம் (கலையரங்கம்), சிட்டி மெடிக்கல் ஸ்டோர் மேற்கு புறம், சந்திரசேகரன் டீக்கடைக்கு தென்புறம், சிவன் விநாயகர்

கோவில் பின்புறம் ஆகிய நான்கு இடங்களில் எங்களுடைய சங்கத்தின் சார்பாக நிறுவப்பட்டுள்ள சிசிடிவி கேமராக்களை போலீசார் ஆய்வு செய்து 31.01.2019 அன்று பதிந்துள்ள தரவுகளை தாங்கள் கொண்டு வந்திருந்த TOSHIBA hard drive ல் பதிவு செய்து கொண்டார்கள். மதுரை ரோட்டில் அமைந்துள்ள SMK System என்ற கடையில் பணிபுரியும் திரு.சரவணக்குமார் என்பவர் போலீசாருக்கு சிசிடிவி பதிவுகளை பதிவிறக்கம் செய்வதற்கு உதவி செய்தார். போலீசார் சிசிடிவி பதிவுகளை ஆய்வு செய்த போது ஆயிரங்கண் மாரியம்மன் கோவில் பூசாரி கண்ணன் என்பவரும் என்னுடன் இருந்தார்.

3. சரவணக்குமார் போலீசாரிடம் ஆஜர் செய்த TOSHIBA hard drive மற்றும் Data Cable ஆகியவற்றை போலீசார் அத்தாட்சியில் என் முன்னிலையிலும் கோவில் பூசாரி கண்ணன் முன்னிலையிலும் கைப்பற்றினார்கள். என்னிடம் காட்டப்படுவது தான் அந்த அத்தாட்சி ஆகும். **அந்த அத்தாட்சி அ.த.சா.ஆ.10 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. அ.த.சா.ஆ.10 ல் முதலில் இருப்பது என்னுடைய கையெழுத்து ஆகும். இரண்டாவதாக இருப்பது கோவில் பூசாரி கண்ணனின் கையெழுத்து ஆகும். என்னிடம் காட்டப்படும் TOSHIBA hard drive மற்றும் Data Cable ஆகியவற்றை தான் அத்தாட்சியில் போலீசார் கைப்பற்றினார்கள். **அந்த TOSHIBA hard drive சா.பொ.14 ஆக குறியீடு செய்யப்படுகிறது. அந்த Data Cable சா.பொ.15 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. போலீசார் இது சம்மந்தமாக என்னை விசாரித்தார்கள்.

**2ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை –**

**(2ம் எதிரிக்காக 2ம் எதிரியே குறுக்கு விசாரணை செய்கிறார்)**

4. கடந்த 31.01.2019 முதல் 06.02.2019 க்குள் போலீசார் சிசிடிவி

பதிவுகளை பார்வையிட்டார்களா என்று எனக்கு நினைவில்லை. 06.02.2019 க்கு முன்னர் போலீசார் சிசிடிவி பதிவுகளை பார்வையிட்டார்களா என்று எனக்கு நினைவில்லை. போலீசார் 06.02.2019 அன்று எங்கள் சங்க அலுவலகத்தில் 31.01.2019 அன்று பதிவான சிசிடிவி பதிவுகளை பார்வையிட்டார்கள். 31.01.2019 அன்று பதிவான சிசிடிவி பதிவுகளில் குறிப்பிட்ட கால இடைவெளிகளையும் பார்த்தார்களா என்று எனக்கு நினைவில்லை.

**3 ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை –**

**(3 ம் எதிரிக்காக 3 ம் எதிரியே குறுக்கு விசாரணை செய்கிறார்)**

5. கடந்த 01.02.2019 அன்று அருப்புக்கோட்டை காவல்துறை துணை கண்காணிப்பாளர் அவர்கள் உங்கள் அலுவலகத்திற்கு வந்தார் என்றால் சரிதான். உங்களிடம் 3 ம் எதிரியை (என்னை) அலுவலகத்திற்கு வருமாறு கூறினார் என்றால் சரிதான். அதன் அடிப்படையில் என்னை (3 ம் எதிரி) நீங்கள் (சாட்சி) போனில் சங்க அலுவலகத்திற்கு அழைத்தீர்கள் என்றால் சரிதான். அருப்புக்கோட்டை காவல்துறை துணை கண்காணிப்பாளர் அவர்கள் உங்கள் அலுவலகத்தில் உங்களுடைய சேம்பரில் வைத்து என்னை (3 ம் எதிரி) விசாரித்தார் என்றால் சரிதான். அச்சமயம் நீங்கள் (சாட்சி), நான் (3 ம் எதிரி) மற்றும் அருப்புக்கோட்டை காவல்துறை துணை கண்காணிப்பாளர் மட்டும் தான் சேம்பரில் இருந்தோம் என்றால் சரிதான். விசாரணை எவ்வளவு நேரம் நடந்தது என்று எனக்கு நினைவில்லை.

என்னால் இத்திறந்த நீதிமன்றத்தில் எதிரி /எதிரிகளின் வழக்குரைஞர் முன்பு சாட்சி சொல்ல சொல்ல என்னால் சான்று மொழி எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டி சாட்சியால் சரி என்று ஒப்புக்கொண்ட பின்னர் கையொப்பம் பெறப்பட்டது என்றும் சான்றளிக்கிறேன்.

M VASANTHA KUMAR

Digitally signed by M VASANTHA KUMAR
Date: 2026.04.18 18:35:34 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி
அருப்புக்கோட்டை.